




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (15.9.2024) பேரறிஞர் அண்ணா அவர்களின் 116வது பிறந்தநாளை முன்னிட்டு சென்னை, அண்ணா சாலையில் அமைந்துள்ள பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவச் சிலைக்கு அருகில் வைக்கப்பட்டுள்ள திருவுருவப் படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார். இந்நிகழ்வில், நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் உள்ளிட்ட அமைச்சர் பெருமக்கள், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர், நாடாளுமன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள், துணை மேயர், தலைமைச் செயலாளர், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.




தமிழ்நாடு முதலமைச்சரும், கழகத் தலைவருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (15.9.2024) பேரறிஞர் அண்ணா அவர்களின் 116வது பிறந்தநாளை முன்னிட்டு சென்னை, வள்ளுவர் கோட்டத்திற்கு அருகே உள்ள பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவச் சிலைக்கு அருகில் வைக்கப்பட்டுள்ள திருவுருவப் படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார். இந்நிகழ்வில், நீர்வளத்துறை அமைச்சரும், கழகப் பொதுச் செயலாளருமான துரைமுருகன், மக்களவை கழகக் குழுத் தலைவரும், கழகப் பொருளாளருமான டி.ஆர்.பாலு உள்ளிட்ட அமைச்சர் பெருமக்கள், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர், நாடாளுமன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள், சென்னை மேற்கு மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு மற்றும் கழக நிர்வாகிகள் கலந்துகொண்டனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (15.9.2024) பேரறிஞர் அண்ணா அவர்களின் 116வது பிறந்தநாளை முன்னிட்டு சென்னை, அண்ணா சாலையில் அமைந்துள்ள பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவச் சிலைக்கு அருகில் வைக்கப்பட்டுள்ள திருவுருவப் படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார். இந்நிகழ்வில், நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் உள்ளிட்ட அமைச்சர் பெருமக்கள், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர், நாடாளுமன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள், துணை மேயர், தலைமைச் செயலாளர், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

### காஞ்சிபுரம் பேரறிஞர் அண்ணா நினைவு இல்லத்தில் உள்ள

# அண்ணா சிலைக்கு - அமைச்சர் தா.மோ.அன்பரசன் மாலை அணிவித்து மரியாதை!

## க.சுந்தர் எம்.எல்.ஏ. – க.செல்வம் எம்.பி. – சி.வி.எம்.பி. எழிலரசன் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

காஞ்சிபுரம், செப்.16-

காஞ்சிபுரம் அண்ணா நினைவு இல்லத்தில் உள்ள அண்ணா திருஉருவச் சிலைக்கு அமைச்சர் தா.மோ.அன்பரசன் மலர்மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

பேரறிஞர் அண்ணா பிறந்த ஊரான காஞ்சிபுரத்தில், அவர் வாழ்ந்த வீடு அரசின் சார்பில் அண்ணா நினைவு இல்லமாக மாற்றி அமைக்கப்பட்டுள்ளது.

பேரறிஞர் அண்ணா அவர்களின் 116வது பிறந்த நாளை யொட்டி, காஞ்சிபுரம் அண்ணா நினைவு இல்லத்தில் உள்ள அண்ணா சிலைக்கு அரசின் சார்பில் மாலை அணிவிக்கும் நிகழ்ச்சி நேற்று காலை நடைபெற்றது.

குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட செயலாளர் தா.மோ.அன்பரசன், காஞ்சிபுரத்திற்கு நேரில் வந்து அண்ணா நினைவு இல்லத்தில் உள்ள அண்ணா திருவுருவச் சிலைக்கு அரசின் சார்பில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் கலைச்செல்வி மோகன், காஞ்சி தெற்கு மாவட்டச் செயலாளர் க.சுந்தர், எம்.எல்.ஏ., காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம், காஞ்சிபுரம் சட்டமன்ற உறுப்பினர் சி.வி.எம்.பி.எழிலரசன், காஞ்சிபுரம் மாநகராட்சி மேயர் எம்.மகாலட்சுமி யுவராஜ் ஆகியோரும் மரியாதை செலுத்தினார்கள்.

இந்த மாலை அணிவிப்பு நிகழ்ச்சியில் மாவட்டப் பொருளாளர் சன் பிராண்ட் கே.ஆறுமுகம், காஞ்சிபுரம் மாநகர தி.மு.க. செயலாளர் சி.கே.வி.தமிழ்ச்செல்வன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் எம்.எஸ்.சுகுமாரன், முன்னாள் மாவட்ட அவைத்தலைவர் சி.வி.எம்.அ.சேகர், ஒன்றிய தி.மு.க. செயலாளர்கள் பி.எம்.குமார், கம்மராசபுரம் க.குமணன், சாலவாக்கம் குமார், கழக தொண்டரணி செயலாளர் காஞ்சி சுகுமாரன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் அ.யுவராஜ், காஞ்சிபுரம் மாநகர அவைத் தலைவர் கே.ஏ.செங்குட்டுவன், மாநகர துணைச் செயலாளர் வ.ஜெகந்நாதன், பகுதி செயலாளர்கள் எஸ்.சந்துரு, ஆர்.தசரதன், முன்னாள் மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் எஸ்.எம்.பொன்னா வெங்கடேசன், கழக அணிகளின் மாவட்ட துணை அமைப்பாளர்கள் எம்.எஸ்.பாலன், பி.எம்.நீலகண்டன், இசட்.ஜாபர், மாநகராட்சி மன்ற உறுப்பினர்கள் கமலக்கண்ணன், சுரேஷ் மற்றும் காஞ்சி சம்பத் வாலாஜாபாத் சச்சிதாஸ் உள்ளிட்ட ஏராளமான தி.மு.க.வினரும் பொதுமக்களும் அண்ணா சிலைக்கு மாலை அணிவித்து வணங்கினார்கள். அண்ணா நினைவு இல்லத்திற்கு வெளியே நின்றிருந்த பொதுமக்களுக்கு அமைச்சர் தா.மோ.அன்பரசன் லட்டு வழங்கினார்.

அதன் பின்னர் காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ., காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட கழக அலுவலகம் அமைந்துள்ள கலைஞர் பவள விழா மாளிகை முன்புள்ள அண்ணா கலைஞர் முழு உருவச் சிலைகளுக்கு மாலை அணிவித்து வணங்கினார்.

அதேபோல் காஞ்சிபுரம் நகராட்சி அலுவலகம் முன்புள்ள அண்ணா சிலை, அண்ணா நூற்றாண்டு விழா நினைவுத்தூண் முன்புள்ள அண்ணா சிலை, காஞ்சிபுரம் மாநகரம் முன்பு அமைந்துள்ள அண்ணா சிலை களுக்கு மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினார்.

இந்த மாலை அணிவிப்பு நிகழ்ச்சிகளில் காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம், காஞ்சிபுரம் சட்டமன்ற உறுப்பினர் சி.வி.எம்.பி.எழிலரசன், காஞ்சிபுரம் மாநகரச் செயலாளர் சி.கே.வி.தமிழ்செல்வன், ஒன்றிய செயலாளர்கள் பி.எம்.குமார், காமராஜபுரம் க.குமணன், சாலவாக்கம் குமார், காஞ்சிபுரம் மேயர் மகாலட்சுமி யுவராஜ் உள்ளிட்ட ஏராளமான கழகத்தினர் கலந்து கொண்டனர்.



பேரறிஞர் அண்ணா அவர்களின் 116வது பிறந்தநாளையொட்டி, காஞ்சிபுரம் அண்ணா நினைவு இல்லத்தில் உள்ள அண்ணா திருவுருவச் சிலைக்கு குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். உடன் காஞ்சிபுரம் தெற்கு மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ., மாவட்ட ஆட்சித்தலைவர் கலைச்செல்வி மோகன், காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம், சட்டமன்ற உறுப்பினர் சி.வி.எம்.பி.எழிலரசன், மாநகராட்சி மேயர் எம்.மகாலட்சுமி யுவராஜ் ஆகியோர் உள்ளனர்.



முன்னாள் அமைச்சர் பெரியவர் மன்னை நாராயணசாமி அவர்களின் கொள்ளு பேரனும், மாநில மாணவர் அணி துணைச் செயலாளரும் மன்னை நகர மன்றத் தலைவருமான மன்னை த .சோழராஜனின் மகனுமாகிய சோழ. அருண் மொழிவர்மன் university college of London (UCL) ல் சட்டம் (LLM )மேற்படிப்பு படிப்பதற்காக லண்டன் (London) செல்லும் முன் கழக இளைஞரணிச் செயலாளரும் தமிழ்நாடு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களை சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.

### பதவி விலகுவதாகப் பேட்டி!

# ஆங்கிலேயர் ஆட்சியை காட்டிலும் பா.ஜ.க. ஆட்சி கொடுமையானது!

## டெல்லி முதல்வர் அரவிந்த் கெஜ்ரிவால் கடும் தாக்கு!

புதுடெல்லி, செப். 16 -

டெல்லி முதலமைச்சர் பதவியிலிருந்து இன்னும் 2 நாட்களில் விலக உள்ள தாக, அம்மாநில முதலமைச்சர் அரவிந்த் கெஜ்ரிவால் அறிவித்துள்ளார்.

டெல்லி மதுபானக் கொள்கை வழக்கில் உச்ச நீதிமன்றத்தால் ஜாமின் பெற்ற முதலமைச்சர் அரவிந்த் கெஜ்ரிவால், திகார் சிறையில் இருந்து ஜாமினில் விடுதலையானார். விடுதலையான பின்னர், முதல்முறையாக நேற்று டெல்லியில் ஆம் ஆத்மி கட்சி நிர்வாகிகள் கூட்டத்தில் பங்கேற்று அரவிந்த் கெஜ்ரிவால் உரையாற்றினார்.



அப்போது பேசிய, கெஜ்ரிவால், ஆங்கிலேயர் ஆட்சியை காட்டிலும் ஒன்றிய பா.ஜ.க. ஆட்சி கொடுமையானது என்றும், தாம் எந்த தவறும் செய்யாத நிலையில், தம்மை சிறையில் அடைத்து பா.ஜ.க. கொடுமைப்படுத்தியதாக குற்றஞ்சாட்டினார்.

தொடர்ந்து பேசிய அவர், டெல்லி முதலமைச்சர் பதவியிலிருந்து இன்னும் 2 நாட்களில் விலக உள்ளதாக அரவிந்த் கெஜ்ரிவால் கூறினார்.

தொடர்ந்து அவர் கூறியதாவது:

முதலமைச்சர் பதவியை நான் ராஜினாமா செய்கிறேன். பொதுமக்கள் என்னை நேர்மையானவன் என கூறும் வரை நான் முதலமைச்சர் நாற்காலியில் அமர மாட்டேன் வீடு தோறும் பொதுமக்களை நேரில் சந்தித்து கருத்து கேட்பேன்.

எனது நேர்மைக்கு மக்களிடம் நற்சான்றிதழ் பெற்ற பிறகே முதலமைச்சர் நாற்காலியில் அமர்வேன். நிரபராதி என நிரூபிக்கும் வரை, முதலமைச்சர் நாற்காலியில் அமர மாட்டேன்.

இவ்வாறு அவர் பேட்டி அளித்தார்.